| Headline | TNB worker suffers burns in high-voltage cable explosion | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 07 Oct 2016 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 5 |
| ArticleSize | 75 cm² | Journalist | NULL |
| PR Value | RM 655 | | |
| | | | |



# மின் கேபள் வெடித்தது

(பி.ஏ.கந்தையா)

தெலுக் இந்தான், அக்.7- ஊத்தான் மெலிந்தாங்கில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் மேடான் நியாகா லெசெண்டா வர்த்தக மையத்தில் மின் இணைப்பு பணிகளை மேற்கொண்ட டிஎன்பி டெக்னீசியன் ஒருவர், அதிக சக்தி வாய்ந்த மின் கேபள் வெடித்ததைத் தொடர்ந்து கடுமையான தீப்புண் காயங்களுக்கு இலக்காகி மாவட்ட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார் என்று பேரா மாநில டிஎன்பி தலைமை நிர்வாகி ராஜா அப்துல் ஜாலில் ராஜா ஜாஹிட் கூறினார். இவ்வெடிப்பு சம்பவம் நேற்று பிற்பகல் 12.15 மணியளவில் நிகழ்ந்தது. படுகாயமடைந்தவர் டிஎன்பி டெக்னீசியன் முகமட் ஜாஹிட் சுலைமான் (வயது 34) என்று அடையாளம் காணப்பட்டது.

Powered by: iSENTIA